# தமிழினி

## தகவல் களஞ்சியம்

ஆடி 2019
இலங்கை விலை ரூபா 45/-
லண்டன் 75 Pence



# பிரிட்டன் பிரதமரானார் போரிஸ் ஜான்ஸன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆசிரியரிடமிருந்து,

அன்பானவர்களே

தமிழினி தகவல் களஞ்சியம் தூய நோக்குடன் வெளியிடப்பட்டு வருகீன்றது. இதனை இலவசமாக பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கின்றோம். ஆனாலும் மாணவர்களிடம் சஞ்சிகை போய் சேருகின்றதா என்பது தெரியவில்லை.

இதனால் அடுத்த மாதம் முதல் கடைகளில் மட்டுமே கிடைக்க வழி செய்துள்ளோம்.

நல்லூர் முருகன் ஆலய உற்சவத்தையொட்டி அறிவிக்கப்பட்ட சமய அறிவுப்போட்டி முடிவு திகதி **29.08.2019** வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டி தொடர்பாக செய்தி வெளியிட்ட உதயன் பத்திரிகை ஆசிரியர் ஊழியர்களுக்கு எமது இதய பூர்வமான நன்றிகள்.

உங்கள் ஆதரவை எமது சஞ்சிகையை படிப்பதன் மூலமும ஆக்கங்களை அனுப்புவதன் மூலமும் ஆதரியுங்கள்.

அன்புடன்

**வ.மா. குலேந்திரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 16ஆவது தேசிய மாநாட்டின் போது எடுக்கப்பட்ட தீர்மானங்கள்

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 16ஆவது தேசிய மாநாடு யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற நிலையில் இதன்போது எடுக்கப்பட்ட தீர்மானங்கள் பிரகடனங்களாக கட்சியின் பொதுச் செயலாளர் கி. துரைசிங்கம் தலைமையில் நாடாளுமன்ற உறுப்பினர்களாலும், கட்சிப் பிரமுகர்களாலும் வெளிப்பகர்வு செய்யப்பட்டுள்ளது.

இந்த மாநாட்டில் அரசியல் தீர்வு ஐ.நா. மனித உரிமைத் தீர்மானம், ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்கள் விடுவிப்பு, காணாமல் ஆக்கப்பட்டோருக் கான தீர்வு உள்ளிட்ட விடயங்கள் தீர்மானங்களாக நிறைவேற்றப் பட்டுள்ளன.

## அரசியல் தீர்வு

இலங்கை நாட்டில் கடந்த 60 ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழினப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஏற்படாத காரணத்தால் இடம்பெற்று வரும் ஜனநாயக வழிப் போராட்டங்களினாலும், ஆயுதப் போரின் விளைவுகளாலும், 2012ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையான ஐ.நா. மனித உரிமைப் பேரவைத் தீர்மானங்களாலும், சர்வதேச சமூகத்தின் தலையீடுகளினாலும் இலங்கை நாடாளுமன்றத்தில் புதிய அரசிய லமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கான தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது. அதன் பொருட்டு இடைக்கால அறிக்கை ஒன்று நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது.

இருந்த பொழுதிலும் தமிழினப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு ஏற்படவில்லை. தாமதங்களும், தடைகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றை மிக விரைவில் இவ்வாண்டுக்குள் ஏற்படுத்த வேண்டுமென அரசையும், அரசியல் கட்சிகளையும், அனைத்து சமூகங்களிடமும் இந்தியா உள்ளிட்ட சர்வதேச சமூகத்திடமும் இம்மாநாடு வேண்டுகோள் விடுக்கிறது.

அவ் அரசியல் தீர்வானது ஒருமித்த இலங்கை நாட்டில் தமிழ் மக்களின் இறையாண்மை, சுய நிர்ணய உரிமை, மனித உரிமை, வாழும் உரிமை அடிப்படையில் சமஷ்டிக் கட்டமைப்பில் பிராந்தியங்களினதும் தேசிய இனங்களினதும் தன்னாட்சி உரிமத்தை உறுதிப்படுத்தும் வகையில் அமைய வேண்டும் என இம்மாநாடு வற்புறுத்துகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐ.நா. மனித உரிமைத் தீர்மானம்

ஐ.நா. மனித உரிமைப் பேரவைத் தீர்மானங்கள் நிறைவேற்றப் படுவது உறுதிப்படுத்தப்படவேண்டும். 2012 முதல் 2015 வரை இலங்கை தொடர்பில் ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் 30:1, 40:1 ஆகியன முழுமையாகக் கால அட்டவணையில் நிறைவேற்றவும், நடைமுறைப்படுத்தவும், மக்கள் பயனுறவும் உத்தர வாதம் அளிக்கவும், நம்பகத்தன்மை நிலைநாட்டப்படவும் வேண்டும் ஐ.நா. மனித உரிமைப் பேரவையும் ஐ.நாவும் இத்தீர்மானங்களை முழுமையான நிறைவேற்றுவதற்கு பொருத்தமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றது. இம்மாநாடு.

## ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்கள் விடுவிப்பு

போர்க் காலத்தில் முப்படைகளினாலும், பொலிஸ் துறையினாலும் வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் ஆக்கிரமிக்கப்பட்ட தனியார், அரச நிலங்கள் தாமதமின்றி விடுவிக்கப்பட வேண்டுமென மாநாடு வலியுறுத்துகின்றது.

அத்தோடு மகாவலித் திட்டத்தின் கீழும், வனவிலங்கு பரிபாலனத் துறை, சுற்றுச் சூழல்துறை, தொல்லியல், கரையோரப் பாதுகாப்பு கனிம முதலான திணைக்களம் அரச மற்றும் அரச துறைகளினால் கையகப்படுத்தப்பட்ட நிலங்கள் மக்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

நிலமற்ற, வீடு அற்ற, தொழிலற்ற மக்களுக்கு நிலங்கள் வீடுகள், தொழில் வாய்ப்புக்கள் வழங்கும் வகையில் நிலங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என இம்மாநாடு வற்புறுத்துகிறது. இந்நிறுவனங்களின் நடவடிக்கைகளை உடனே நிறுத்த வேண்டுமென ஜனாதிபதியையும், அரசையும் வற்புறுத்திக் கோருகின்றது இம்மாநாடு.

## காணாமல் ஆக்கப்பட்டோருக்கான தீர்வு

காணாமல் அடக்கப்பட்டவர்கள் குறிப்பாகப் போர்க் காலத்தில் இராணுவத்திடம் சரணடைந்தவர்கள், உறவினரால் கையளிக்கப்பட்ட வர்கள் தொடர்பில் பதில் வழங்க வேண்டிய பொறுப்பு இன்றைய அரசுக்கும் உண்டு.

ஐ.நா. மனித உரிமைப் பேரவைத் தீர்மானத்தால் நிறுவப்பட்ட விசாரணைக்குக் குழுவின் நடவடிக்கைகள் மீது பாதிக்கப்பட்டவர் களுக்கும், மக்களுக்கும் நம்பகத்தன்மை ஏற்படும் வகையில் சிபார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுகளும், நடவடிக்கைகளும் இடம்பெறுவதை உறுதிப்படுத்த வேண்டும் எனவும் இப்பிரச்சினைக்கு காலம் தாழ்த்தாமல் தீர்மானங்கள் எடுக்க வேண்டும்.

## மீள்குடியேற்றம்

போரின் காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் தத்தம் நிலங்களில், உடன் மீள்குடியமர்த்தப்பட வேண்டும். மக்கள் வாழ்வுரிமை அங்கீகரிக்கப்பட்டு நிலமற்றவர்களுக்கு நிலம், தொழில், அற்றவர்களுக்கு தொழில், வீடு அற்றவர்களுக்கு வீடு உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

வெளிநாடுகளில் குறிப்பாக இந்தியாவில் இடம்பெயர்ந்து வாழ்பவர் களை அவர்கள் விருப்பறிந்து அவர்கள் இடங்களில் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் விரைவுபடுத்தப்பட வேண்டும் என இம்மாநாடு வற்புறுத்துகின்றது.

புலம்பெயர்ந்த மக்கள் இரட்டைக்குடியுரிமை பெறுவதற்கும், முதலீடுகள் செய்வதற்கும் உள்ள பொருத்தமான இலகுமுறைகள் சட்ட நடவடிக்கை உருவாக்கப்பட வேண்டும் என இம்மாநாடு வற்புறுத்து கின்றது.

போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் மீளக்குடியேறுவதற்கும் மீள் கட்டுமானப் பணிகளுக்கும் அரசு போதிய நிதியையும் வளங்களையும் உடன் விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் வற்புறுத்துகி றோம்.

## அரசியற் கைதிகள் விடுதலையும், பயங்கரவாத தடைச்சட்டமும்

போர் காரணமாக கைது செய்யப்பட்டவர்கள், சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளவர்களுக்கு அரசியல் தீர்மானம் எடுக்கப்பட்டு மன்னிப்பின் அடிப்படையில் விடுவிக்கப்பட வேண்டுமெனவும் அதற்கு வசதியாகவும், நடைமுறைச் சாத்தியமாகவும் உலகதரம் மிக்க சட்டமொன்றை தேவைப்படின் கொண்டு வருவதற்குப் பொருத்தமாகத் தற்போதுள்ள கொடிய பயங்கரவாதத் தடைச்சட்டமானது உடன் நீக்கப்பட வேண்டுமெனவும் இம்மாநாடு வற்புறுத்துகிறது.

## கல்முனை வடக்குப் பிரதேச செயலகம்

30 வருட காலமாக தரமுயர்த்தப்படாமலும், கல்முனை பிரதேச மக்களின் நீண்டகால எதிர்பார்ப்புமாக இருக்கும் கல்முனை வடக்குப் பிரதேச செயலகம் தரமுயர்த்தப்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது தொடர்பில் கடந்த பாதீட்டின் பொது பிரதமருடன் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டு தீர்மானங்கள் பல மேற்கொள்ளப்பட்டது. இருப்பினும் கடந்த ஏப்ரல் 21 தாக்குதலையடுத்து அத்தீர்மானங்களை நிறைவேற்றுவதை அரசு தாமதப்படுத்தி விட்டது.

இதன் காரணமாக மக்கள் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எனவே இனியும் தாமதம் செய்யாமல் அரசு இவ்விடயத்தை நிறைவேற்ற வேண்டும்.

30 வருட கால மக்களின் எதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்யும் வகையில் எமக்கு வழங்கிய வாக்குறுதிகளுக்கு அமைவாக கல்முனை வடக்குப் பிரதேச செயலகம் மிக விரைவில் தரமுயர்த்தப்படல் வேண்டும்.

## தொழில் வேலைவாய்ப்பு

குறிப்பாக போரால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் கல்விகற்ற, பட்டப்படிப்புக் கொண்டவர்களுக்கு மூப்பு அடிப்படையில் 2012ஆம் ஆண்டுக்குப் பின்னரிலிருந்து வேலையற்றவர்களுக்கு வேலைவாய்ப்பை உறுதிப்படுத்த வேண்டுமென்றும், அரசுத்துறையில் வேலைவாய்ப்பைப் பெறத் தகுதியானவர்கள் வயது கூடியவர்கள் இருப்பின் 45 வயதுடையவர்களுக்கும் வேலைவாய்ப்பு வழங்க அமைச்சரவைத் தீர்மானமொன்றை உடன் நிறைவேற்ற வேண்டும் என இம்மாநாடு வற்புறுத்துகின்றது.

மேலும் நீண்டகாலமாக சம்பளம் கூட இல்லாமல் ஆசிரியர்களாக இருக்கும் தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கவேண்டும். குறைந்தது 15 ஆயிரம் ரூபா ஆரம்பத்தில் வழங்கவும் அரசும், மாகாண சபையும் நடவடிக்கை எடுக்கவேண்டும். இறுதியாக தொண்டர் ஆசிரியர் நியமனத்தில் குறைபாடுகளை ஆராய்ந்து தகுதியுடையோருக்கு இவ்வாண்டுக்குள் நிரந்தர நியமனம் வழங்கவும் வேண்டும்.

## போராளிகள் ஜனநாயக நீரோட்டத்தில் இணைப்பு

போர் காரணமாகக் கல்வி பெற வாய்ப்பற்றவர்கள் குறிப்பாக போராளிகளாக இருந்தவர்களுக்கு சிறப்பு பயிற்சி, தொழில்நுட்பப் பயிற்சி வழங்கி அரசுத் துறையிலும், தனியார் துறையிலும் வேலை வாய்ப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

அவர்களுக்கும் அடிப்படைச் சம்பளம் வாழ்க்கைச் செலவுக்கேற்ப வழங்கவேண்டும். அதுவரை அவ்வாறானவர்கள் வாழ்வதற்கு நிதியுதவி வழங்கும் முறையொன்றைக் கொண்டுவர வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனநாயக நீரோட்டத்தில் இணைக்கப் பொருத்தமான நடவடிக்கைகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என இம்மாநாடு வற்புறுத்துகிறது. இராணுவத்திடமுள்ள பண்ணைகள் விடுவிக்கப்பட்டு போராளிகளாய் இருந்தவர்களின் முகாமைத்துவத்திடம் ஒப்படைக்கவும் வேண்டும்.

மேலும் இதற்குப் பொருத்தமாக அரசுத் துறையிலும், ஏற்பட்டுள்ள வெற்றிடங்கள் அவ்வப் பிரதேசங்களிலிருந்தே சிற்றூழியர் ஆயினும் நிரப்புதல் வேண்டும். வேலைவாய்ப்புக்கள் அவ்வப் பிரதேசங்களிலிருந்தே நியமனம் செய்யப்பட வேண்டும்.

அந்த விடயங்களில் தவறாக நிரப்பப்பட்டிருந்தால் அவர்களை திருப்பிப் பெறவேண்டும். உரிய பிரசேதங்களில் இடமாற்றம் வழங்க வேண்டும். பொருத்தமான தொழில்துறைகள் உருவாக்கப்படவும் வேண்டும்.

## பெண் தலைமைத்துவக் குடும்பங்கள்

போரினால் பாதிக்கப்பட்ட பெண் தலைமைத்துவம் கொண்ட 90 ஆயிரம் குடும்பங்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு புதுவாழ்வு, வாழ்வாதாரம், வேலைவாய்ப்பு பெறக்கூடிய வகையில் தொழில் துறைகள் ஏற்படுத்தப்பட்டு அவர்கள் வாழ்வுரிமை உறுதிப்பட வேண்டுமென மாநாடு வற்புறுத்துகிறது.

வரவு செலவுதிட்ட அறிவிப்புக்கள் முழுமையாக பயனுறவில்லை. எனவே புதிய அணுகல் முறைகளில் அக்குடும்பங்கள் வேலைவாய்ப்பு, வாழ்வாதாரம், புதுவாழ்வு பெற உடன் அரசு செயலாற்ற வேண்டுமென வற்புறுத்துகிறது இம்மாநாடு.

## இலங்கை நாட்டில் பெண்களில் குடிசன மதிப்பீடு

இலங்கை நாட்டில் பெண்களின் குடிசன மதிப்பீடு 53ளு தான் வருகின்றது. பொதுமக்கள் பிரதிநிதித்துவத்தில் நாடாளுமன்றத்திலும், மாகாணத்திலும், உள்ளூராட்சியிலும் போதிய பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்பட வேண்டும்.

பெண்களின் ஜனநாயக உரிமைகள் மதிக்கப்பட வேண்டும். பாலியல் வன்முறைகளிலிருந்தும், சிறுவர் துஸ்பிரயோகங்களிலிருந்தும் பெண்களும், சிறுவர்களும் பாதுகாக்கப்பட வேண்டும்.

பாலியல் வன்முறைகளில் சிறுவர் துஸ்பிரயோகத்தில் ஈடுபடுபவர்களுக்கெதிராக தண்டனை வழங்கப்படுதல் துரிதப்படுத்தப்பட வேண்டும் என வற்புறுத்துகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொழில் துறைகள்

போர் காரணமாக அழிக்கப்பட்ட கைவிடப்பட்ட பெருந் தொழிற் சாலைகள் பொருத்தமான வகையில் நவீன மயமாக்கப்பட்டு மீளக் கட்டியெழுப்புதல், போரினால் பாதிக்கப்பட்டு வேலைவாய்ப்பு அற்றிருக்கும் இளைஞர், யுவதிகளின் எதிர்கால வாழ்வாதாரத்தையும், வாழ்க்கையையும் கட்டியெழுப்புவதற்குப் பொருத்தமாக புதிய அறிவியல் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி புதிய சிறுதொழில்கள், மத்திய தர தொழில்கள் பெருந்தொழில் துறைகளை குறுகியகால, நீண்டகால அடிப்படையில் உருவாக்க வேண்டும். பெரு முதலாளித்துவ முதலீடு களுக்கு ஈடாக மக்கள் கூட்டாகவும் பங்களிப்பும் முகாமைத்துவமும் செய்து பயனுறும் தொழில்துறைகளும் உருவாக்கப்பட வேண்டும்.

## தெங்கு, பனம்பொருள் அபிவிருத்தி

பனம்பொருள் துறைகள், பதநீர், கருப்பட்டி மற்றும் பனைவள உற்பத்திகள் மற்றும் திக்கம் வடிசாலை அபிவிருத்தி, கள்ளு போதையற்ற நிலையில் போத்தலில் அடைத்தல் அதனை சந்தைப்படுத்தல் நவீன முறையில் ஏற்படுத்த வேண்டும். அதனால் பெறப்படும் இலாபங்கள் கூட்டுறவாளர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படுதல் வேண்டும் என இம் மாநாடு வறபுறுத்துகிறது.

## மீன்பிடித்துறை

மீன்பிடித்துறையில் நவீன தொழில்நுட்பமும் பயிற்சியும், சந்தைப் படுத்தலும் அவசியமாகப்பட வேண்டும். மட்டக்களப்பு கல்லடியில் பழுதடைந்த நிலையில் உள்ள ஐஸ் கட்டித் தொழிற்சாலை புனரமைக் கப்பட்டு நவீன மயப்படுத்தப்பட வேண்டும்.

மீன் பதனிடுதல் மக்கள் பாவனைக்கு ஏற்ற வகையிலும் ஏற்றுமதி செய்வதற்கும் பாதுகாப்பான தகரத்தில் அடைத்தலுக்கு ஏற்ற தொழில் நுட்பம் பயன்படுத்தப்பட வேண்டும். இலாபங்கள் தொழில் செய்பவர் களுக்கே செல்லும் வகையில் திட்டமிடப்பட வேண்டும்.

உருவாக்கப்படும் மீன்பிடித்துறைகள் பல நாள் மீன்பிடி படகுகள் பயன்படுத்தவும் அத்துறையில் நவீன பயிற்சிகளும் தொழில் புரிவோர்க்கு வழங்கப்படுதலும் வேண்டும். இப்படகுகளுக்கு 50ரூ நிவாரணம் உண்டு.

வடக்கு, கிழக்கு மீனவர்களின் தொழிலுரிமை பாதுகாக்கப்படல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கு, கிழக்கு மீனவர்களின் தொழிலுரிமை பாதுகாக்கப்படுத்தப் படல் வேண்டும். மீன் பிடிப்பதிலும் கலங்களைப் பயன்படுத்துவதிலும் நவீன பயிற்சிகளும், சிறந்த பாவனைக்குரிய கலங்கள் தனித்தும், கூட்டாகவும் தொழிலில் ஈடுபடுவதற்கு அரசு நவீன முறைகளைக் கையாள உதவவேண்டும். சந்தைப்படுத்தலில் தொழிலில் ஈடுபடுபவர்கள் முழு அளவில் வருமானத்தை ஈட்டுவதற்கும் பொருத்தமான வகையில் திட்டங்கள் அறிமுகப்படுத்த வேண்டும்.

வடக்குக்கு, கிழக்கு மீனவர்கள் தங்கள் வாழ்விடங்களிலிருந்து கடலில் தொழில் செய்வதற்கு தடையாகவும், மீன் வளத்தை அழிக்கும் வகையிலும் தடைசெய்யப்பட்ட மீன்பிடி சாதனங்கள், வள்ளங்கள் பயன்படுத்துதல் தென்னிலங்கை மீனவர்களும் அயல் நாடுகளிலிருந்தும் பெரும் கலங்களையும், இயந்திரங்களையும் வடக்குக் கிழக்குப் பிராந்தியக் கடலில் வந்து தரித்து நின்று ஆக்கிரமித்து மீன் வளத்தை அள்ளிச் செல்வதினாலும் ஊர் மீனவர்கள் பாதுகாக்கப்பட வேண்டியது அவசியமானதாகும்.

## கல்வி

ஆரம்பக் கல்வி கற்பதும் கட்டாயமானதாகும். பல்கலைக்கழக மற்றும் தொழில்துறை கற்கை நிறுவனங்கள், தொழில்நுட்பக் கற்கைகள் வடக்குக் கிழக்குக் கிழக்கில் பிராந்திய உயர் கற்கை நிறுவனங்களாகவும், அனைத்துதுப் பீடங்களையும் கொண்டதாகவும் மாணவர் அனுமதியில் 75ரூ க்கு மேல் அந்தந்தப் பிராந்தியங்களிலிருந்தே திட்டமிட்ட அடிப்படையில் தேர்ந்தெடுப்பதும் தொழிலை உறுதிப்படுத்துவதும் அறிவியல், மருத்துவம், பொறியியல் மற்றும் வர்த்தகத் துறைகளுக்கு 65ரூ மாணவர்களை உள்வாங்குதலும் உருவாக்குதலும் வேண்டும் என மாநாடு வற்புறுத்துகிறது.

## நில, நீர் உரிமை நிலைநாட்டல்

மகாவலி நீர் வேளாண் அபிவிருத்தியில் குடிசார் மக்கள் இனவீத மாற்றம் ஏற்படாத வகையில் நீர் பாய்ச்சல், குளங்கள் என்பவற்றிற்கு நீர்பாசனத்திற்கு மட்டுமே அத்திட்டங்கள் பயனுற வேண்டும். அபிவிருத்தியில், குடியேற்றத்தில் அப்பிராந்திய மக்களுக்கே முற்றிலும் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். இத்திட்டங்கள் எவ்வகையிலும் இன விகிதாசாரம் மாற்றப்படாமலிருப்பதை உறுதிசெய்ய வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வங்கிக் கடன் இரத்து

போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வங்கிகள், கடன்கள் வழங்கியிருந்தன. அக்கடன்கள் அம்மக்களுக்கு வாழ்வாதரத்தை ஈட்டிக் கொடுக்கவில்லை. கடன் பெற்றவர்கள் போரில் உடமைகளை, தொழிலை இழந்தவர்கள் கடன்களைத் தீர்க்க முடியாமல் இருந்ததையும் இழக்கும் நிலையில் உள்ளனர். இவர்கள் பெற்ற கடன்களை இரத்துச் செய்ய வேண்டும் என வற்புறுத்துகின்றது. இம்மாநாடு தற்போது சில படு கடன்களை அரசு செலுத்தி வருகிறது நன்றேயாகும்.

## தொழிற்சங்க உரிமை

பல துறைகளிலும் தொழிலாளர்கள் உரிமைகளுக்காக உழைத்து வரும் தொழிற்சங்கங்கள் அங்கீகரிக்கப்பட வேண்டும். அச்சங்கங் களுடன் அரசு பிரச்சனைகள் எழும்போது அவர்களுடன் ஜனநாயக ரீதியில் பேச்சுக்கள் மூலம் இணக்கம் ஏற்பட முயற்சிப்பதுதான் தேவையென வற்புறுத்துகிறோம்.

தேர்தல்களில் மலையக மக்கள், முஸ்லீம் மக்கள், பெண்கள் குறிப்பாக ஏனைய சமூக மக்கள் பெரும்பான்மையாயிருக்கும் நிலையில் அவ் வட்டாரங்களில், தொகுதிகளில் தனியான ஒதுக்கீடுகள் வீதாசார அடிப்படையில் பிரதிநிதித்துவம் உறுதிப்படுத்தப்படும் வகையில் உருவாக்கப்படவேண்டும்.

## கூட்டுறவுத்துறை

வடக்குக் கிழக்கில் கூட்டுறத்துறை ஒரு காலத்தில் இலாபத்துடன் மக்களுக்குப் பெரும் சேவை ஆற்றி வந்தது. போர் காலத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் பாதிக்கப்பட்ட மக்களிடையே அச்சுறுத்தல் மத்தியிலும் பெரும் உதவியாக விளங்கியது. அக்காலத்திலும், அதன் பின்னரும் கூட்டுறவுச் சங்கங்களின் சொத்துக்கள் அழிக்கப்பட்டு கடன்படும் நிலைக்கும் தள்ளப்பட்ட கூட்டுறவு ஊழியர்கள் சம்பளம் பெறாமலேயே பலகாலம் தன்மை அர்ப்பணித்து மக்களுக்கு உதவி வந்தனர். குறிப்பாக வடக்கு கிழக்குப் பகுதியில் கூட்டுறவுத் துறையடைந்துள்ள நட்டங் களுக்கும், கடன்களுக்கும் அரசு பொருத்தமான உதவி வழங்க வேண்டும். மீண்டும் கூட்டுறவுத் துறைக்குப் புத்துயிர் அளிக்க வேண்டுமென அரசையும், மாகாணசபையையும் வற்புறுத்துகின்றது இம்மாநாடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளூராட்சி மன்றங்கள்

அண்மையில் 2018இல் நடைபெற்ற உள்ளூர் அதிகாரசபைத் தேர்தல்களினால் உருவாக்கப்பட்ட சபைகளுக்கு நிதி உட்பட்ட கூடுதலான அதிகாரங்கள் அரசியலமைப்பினால் வழங்கப்பட வேண்டும். போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களையும், மக்களையும் மீளக் கட்டியெழுப்பு வதற்கு போதிய நிதி நன்கொடைகள் கிடைக்க வழி செய்யவேண்டும்.

## பனை, தென்னை அபிவிருத்திச் சபை

மாகாண அதிகாரத்தில் கொண்டு வரவேண்டும். பனை தென்னை அபிவிருத்திச் சபைக் கூட்டுறவுக் கட்டமைப்பினால் நிர்வகிக்க முழு அதிகாரம் வழங்கப்பட வேண்டும். திக்கம்வடி சாலை நவீன வசதி களுடன் மீளக் கட்டியெழுப்ப அரசின் ஒப்புதல் அங்கீகாரம் அளிக்கப் பட்டுள்ளது. அரசு தலையிட்டு திக்கம் வடிசாலையை கட்டியமைக்க கூட்டுறவுத் துறையிடம் ஒப்படைக்கவும் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## சம்பள நிர்ணயம்

வாழ்க்கைச் செலவைக் கட்டுப்படுத்த வேண்டும். வாழ்க்கைச் செலவுக்கு ஏற்ப சம்பளம் நிர்ணயிக்கப்பட வேண்டும். அரசு, தனியார் தேயிலை, ரப்பர் முதலான தொழிலாளர்களுக்கும் வாழ்க்கைச் செலவுக்கேற்பச் சம்பளம் நிர்ணயிக்கப்பட வேண்டும்.

## உற்பத்திகளுக்கு நியாய விலை

நெல், வெங்காயம் முதலான வேளாண் விளைச்சல், மீன் வளம், பனை வளம் முதலான உற்பத்தி பண்டங்களுக்கு நியாய விலை நிர்ணயிக்கப்பட வேண்டும். வேளாண்மை அறுவடைக் காலங்களில் அவ்வுற்பத்திகள் இறக்குமதி நிறுத்தப்படவேண்டும்.

சந்தைப் பொருளாதாரம் வர்த்தகம் உயர்த்துவதற்கு பொருளாதார மையங்கள் உருவாக்கப்பட வேண்டும். உலகதர உற்பத்திகளைப் பெருக்கவேண்டும். இயற்கை வேளாண், மைக்கும் சந்தைப்படுத்தலுக்கும் தரமுயர்த்தப்பட வேண்டும். கல்வித் துறைக்கு அங்கீகாரம் வழங்க வேண்டும். பல்கலைக்கழகத்தில் சித்த மருத்துவம் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

மக்களின் உடல் நலம் உலக சுகாதார மேம்பாட்டை கொண்ட தாகவும் அனைவருக்கும் மருத்துவம் கிடைப்பதையும் உறுதிப்படுத்தப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படவேண்டும். மக்களுக்கு உலகதர மருத்துவம் உறுதிப்படுத்தவும் பொருத்தமான மருத்துவர்கள், தாதிகள் நியமனம் செய்யப்பட வேண்டும்.

## ஊடகவியலாளர்

ஊடகவியலாளர்களைப் பாதுகாப்பது ஜனநாயகக் கடமையாகும். இருந்தும் பல ஊடகவியலாளர் தமிழ் சிங்கள ஆசிரியர்களுட்பட மர்மமான முறையிலும் நேரடியாகவும் கொல்லப்பட்டுள்ளனர். ஊடகத் துறை மிகுந்த அச்சுறுத்தலுக்கும், வன்முறைகளுக்கும் உள்ளாகி வருகிறது.

இத்தகைய கொலைகள் அச்சுறுத்தல்கள் பற்றி முழுமையான நேர்மையான விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இக் கொலைகள் அச்சுறுத்தல்களின் பின்னணிகள், உண்மைகள் வெளிக் கொணரப்பட வேண்டும்.

இதற்காக ஆணைக்குழு ஒன்றை நியமிக்கவும் வேண்டும் என இம்மாநாடு வற்புறுத்துகிறது. பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டாடு நிவாரணம் வழங்கவும் வேண்டும்.

## வடக்குக் கிழக்கிற்கு இணைந்த கட்டுமானமும் மேற்பார்வையும்

போரினால் முப்பது ஆண்டுகளுக்கு மேலாக பாதிக்கப்பட்ட வடக்குக் கிழக்குப் பிரதேசங்களையும், மக்களையும் மீளக் கட்டி யெழுப்புவதற்கு அனைத்துத் துறைகளிலும் முழுமையான ஒன்றிணைந்த திட்டங்கள் தீர்மானிக்கப்பட்டு அத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தவும் நிறைவேற்றவும் நிபுணத்துவமும், வினைத்திறனும் அர்ப்பணிப்பும் கொண்ட பொறிமுறை நிறுவப்பட வேண்டும்.

போரினால் சீரழிந்த நாடுகளின் மீளக் கட்டியெழுப்புவதில் அனுபவம் நிபுணத்துவம் மிக்கவர்கள் இணைத்துக் கொள்ளப்படுவதுடன் கால அட்டவணையில் அத்திட்டங்கள் நிறைவேற்றப்படுதலும் உறுதி செய்யப்படவேண்டும் என இம்மாநாடு வற்புறுத்துகிறது.

## பயங்கரவாதத் தடைச்சட்டம்

சென்ற ஏப்ரல் 21ன் பின் நாட்டில் அவசரகாலச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டு நடைமுறையில் உள்ளது. அவசரகாலச் சட்டம் உடனடியாக நீக்கப்பட வேண்டும். அதைவிட நாட்டில் உள்ள பயங்கரவாதத் தடைச்சட்டம் மிகப் பாரதூரமானது. அரசுத் தலைவர்கள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரச நிர்வாகிகள், இராணுவத் தரப்பினர், காவல் துறையினர் எதேச்சாரிகரமாகப் பயன்படுத்துவதனால் மக்கள் பாதிக்கப்படுகின்றனர்.

சிறைகளில் எல்லையற்று கைதிகளாகி வருகின்றனர். ஐ.நா. மனித உரிமைப் பேரவை, மனிதநேய அமைப்புக்கள் வற்புறுத்தியும் இப் பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படவில்லை. ஆகவே இச்சட்டத் தினை உடன் நீக்கவேண்டுமென இம்மாநாடு வற்புறுத்துகிறது.

## பலாலி விமானத்தளம்

பலாலி விமானப் போக்குவரத்து இந்திய அரசுடன் உடன் பட்டவாறு பிராந்திய விமான நிலையமாகத் தரமுயார்த்தி விமானப் போக்குவரத்தை விரைவாக ஆரம்பிக்க வேண்டுமென இந்திய அரசையும், இலங்கை அரசையும் வற்புறுத்திக் கேட்டுக் கொள்கின்றோம்.

## போதைப்பொருள் ஒழிப்பு

இலங்கையில் குறிப்பாக வடக்கு கிழக்கு மாநிலத்தில் தீவிர மடைந்துள்ள போதைப்பொருள் விற்பனை, பாவனையை முற்றாக ஒழிக்க அரசும் காவல்துறையும் மக்கள் ஆதரவைப் பெற்று தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும் என இம்மாநாடு வற்புறுத்துகிறது.

## இலங்கை அரசியல் அமைப்பில் 19ஏ

இலங்கை அரசியல் அமைப்பில் 19ஏ விதியை நாட்டின் சாபக்கேடு என்றும் இவ்விதியை நீக்கவேண்டுமென்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா நாட்டுக்கு அறிவித்திருக்கிறார்.

நாட்டின் ஜனநாயகத்தின் மீது நம்பிக்கையுள்ள எவரும் ஜனாதிபதியின் இக்கருத்தை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்.

இலங்கைத் தமிழரசுக் கட்சி இம்மாநாட்டுச் சந்தர்ப்பத்தில் இந்நாட்டு அரசியலமைப்பை ஏற்றுக் கொள்ள முடியாது விட்டாலும் ஒரு புது அரசியலமைப்பை உருவாக்குவதற்கு நாடாளுமன்றம் ஏகமனதாக தீர்மானத்தை எடுப்பதாலும் 19ஏ அரசமைப்பு விதியை மேலும் மேம்படுத்தி புதிய அரசியலமைப்பை உருவாக்குவது தான் சிறப்பானது என்று நம்புகிறோம்.

எனவே ஜனாதிபதி 19ஏ நாட்டின் சாபக்கேடு என்றும், நீக்க வேண்டுமென்றால் அதனை நாம் எதிர்க்கின்றோம். நிராகரிக்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19ஏ அரசியல் திருத்தத்தைப் பாதுகாக்க அனைத்து ஜனநாயக சக்திகளையும் அணி திரட்டிப் போராட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என கருதுகின்றோம்.

## மரண தண்டனை

மனிதாபிமானமற்ற மரணதண்டனை செயற்பாட்டுக்கு எதிராகவும் இம்மாநாடு தீர்மானமொன்றை எடுக்கின்றது. சட்டத்தின் பெயரில் உயிரைக் கொல்லும் செயற்திட்டத்தை ஏற்க முடியாது.

இந்தப் பிரகடனத்தில் வரிசைப்படுத்தப்பட்டுள்ள விடயங்களின் பால் அதிக அக்கறையை அரசு செலுத்தவேண்டும் என்றும், கூட்டு எதிர்கட்சி உட்பட அனைத்து அரசியலாளர்கள், சிவில் சமூகத்தினர், மதத் தலைவர்கள், அரச துறைசாரா நிறுவனங்கள், அறிவழைப்பினர் (புத்தி ஜீவிகள்) உள்ளிட்ட நாட்டு நலனின் பால் அக்கறையுள்ள அனைவரும் தங்களாலான சாதக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அக்கறையோடும் அன்போடும் வேண்டி நிற்கின்றோம் என இம்மாநாட்டில் வலியுறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஹுவாவேஸ்மார்ட்ஃ போன்களில் இனி கூகுள் செயலி இருக்காது - காரணம் என்ன?

ஆண்ட்ராய்ட் ஆப்ரேடிங் சிஸ்டத்தில் உள்ள சில மேம்படுதல்களை ஹுவாவே அலைப்பேசி நிறுவனம் பெறமுடியாதபடி கூகுள் அதனை நிறுத்தியுள்ளது. ஹுவாவேவின் புதிய ஸ்மார்ட் ஃபோன்களில் கூகுள் மேப்ஸுக்கான அனுமதியும் மறுக்கப்பட்டுள்ளது.

அனுமதி இல்லாமல் அமெரிக்க நிறுவனங்களுடன் வர்த்தகம் செய்ய முடியாத நிறுவனத்தின் பட்டியலில் ஹுவாவேயின் பெயரை அமெரிக்கா அறிவித்ததை தொடர்ந்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது சீன அலைப்பேசி தயாரிப்பு நிறுவனமானஹுவேவுக்கு ஒரு பலத்த அடியாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகக்கிண்ணம் – 2019

ஐ.சி.சி. 12ஆவது உலகக் கிண்ணத் தொடரானது கடந்த 31ஆம் திகதி இங்கிலாந்தில் ஆரம்பமாகி முடிவடைந்துள்ளது.

மொத்தமாக 10 நாடுகள் கலந்து கொண்ட இத்தொடரின் இறுதிப் போட்டியில் இயன் மோர்கன் தலைமையிலான இங்கிலாந்து அணி கேன் வில்லியம்சன் தலைமையிலான நியூஸிலாந்து அணியை வீழ்த்தி முதன் முறையாக சர்வதேச ஒருநாள் உலகக் கிண்ணத்தை கைப்பற்றியுள்ளது.




## இந்த உலக் கிண்ணத் தொடரில் இடம்பெற்ற முக்கியமான பதிவுகள் பின்வருமாறு

### 1. பரிசுத்தொகை

- சம்பியன் - இங்கிலாந்து - 4,000,00 அமெரிக்க டொலர்கள் (இந்திய ரூபாவில் 28 கோடி)
- ரன்னர் அப் - நியூஸிலாந்து - 2,000,00 அமெரிக்க டொலர்கள் (இந்திய ரூபாவில் 14 கோடி)
- அரையிறுதியில் தோல்வியடைந்த அணிகள் - இந்தியா, அவுஸ்திரேலியா - 800.000 அமெரிக்க டொலர்கள் (இந்திய ரூபாவில் 5.6 கோடி)

### 2. தொடரின் ஆட்ட நாயகன் - கேன் வில்லியம்சன்

- மொத்தம் - 578 ஓட்டம். சராசரி - 82.57, சதங்கள் - 2, அரைசதம் 2, கூடிய ஓட்டம் - 148.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## 3. ஒருநாள் உலகக் கிண்ணத் தொடரின் ஆட்ட நாயகன்களாக தெரிவானவர்கள்

- 1992 - மார்ட்டின் குரோவ் - நியூஸிலாந்து
- 1996 - சனத் ஜெயசூரியா - இலங்கை
- 1999 - வோன்ஸ் குளுஸ்னர் - தென்னாப்பிரிக்கா
- 2003 - சச்சின் டெண்டுல்கர் - இந்தியா
- 2007 - கிளேன் மெக்ராத், அவுஸ்திரேலியா
- 2011 - யுவராஜ் சிங் - இந்தியா
- 1996 - அரவிந்த டி சில்வா - இலங்கை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- 1999 - ஷெேன் வோர்ன் - அவுஸ்திரேலியா
- 2003 - ரிக்கி பொண்டிங் - அவுஸ்திரேலியா
- 2007 - எடம் கில்கிறிஸ்ட் - அவுஸ்திரேலியா
- 2011 - மகேந்திர சிங் தோனி - இந்தியா
- 2015 - ஜேம்ஸ் போல்க்னர் - அவுஸ்திரேலியா
- 2019 - பென் ஸ்டோக் - இங்கிலாந்து

## 4. தொடரின் துடுப்பாட்ட சாதனைகள்

- அதிக ஓட்டம் ரோகித் சர்மா - 648 ஓட்டங்கள்
- 300 ஓட்டங்களை கடந்த இன்னிங்ஸ்கள் - 26
- ஒரு இன்னிங்ஸில் அதிகபடியான ஓட்டங்களை பெற்ற வீரர் - டேவிட் வோர்னர் - 156

### ஓட்டங்கள்

- அதிக ஓட்டங்களை குவித்த அணி - இங்கிலாந்து - 397,6
- அதிக சிக்ஸர்களை விளாசியவர் - இயன் மோர்கன் - 22
- அதிக நான்கு ஓட்டங்களை விளாசியவர்கள் - ஜோனி பெயர்ஸ்டோ, ரோகித்சர்மா - 67
- சிறந்த சராசரி - சஹிப் அல்ஹசன் - 86.57
- அதிக சதங்களை குவித்த வீரர் - ரோகித் சர்மா - 5
- தொடர்ந்து அதிகபடியான அரைசதங்களை குவித்த வீரர்கள் - விராட் கோலி, சஹிப் அல்ஹசன்
- அதிகபடியான அரைசதங்களை குவித்த வீரர் - சஹிப் அல்ஹசன் - 7
- அதிக பந்துகளை எதிர்கொண்ட வீரர் - கேன் வில்லியம்சன் - 771

## 5. தொடரின் பந்து வீச்சு சாதனைகள்

- அதிக விக்கெட்டுக்களை கைப்பற்றியவர் - மிட்செல் ஸ்டாக் - 27
- ஒரு போட்டியில் அதிக விக்கெட்டுக்களை கைப்பற்றியவர் - செஹீன் அப்ரிடி - 6,39
- சிறந்த சராசரி - மொஹமட் ஷமி - 13.79 (நான்கு போட்டிகள்)
- அதிகபடியான ஓட்டம் அற்ற ஓவர் - புத்ரா - 9
- ஹெட்ரிக் சாதனை வீரர்கள் - ட்ரெண்ட் போல்ட், மொஹமட் ஷமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிட்டன் பிரதமரானார் போரிஸ் ஜான்ஸன்

பிரிட்டனின் கன்சர்வேடிவ் தலைமைக்கு நடைபெற்ற போட்டியில் முன்னாள் உள்துறை அமைச்சர் போரிஸ் ஜான்ஸன் (55) வெற்றி பெற்றதையடுத்து, நாட்டின் பிரதமராக அவர் பொறுப்பேற்றார்.

ஐரோப்பிய யூனியனிலிருந்து பிரிட்டன் வெளியேறும் விவகாரத்தில் (பிரெக்ஸிட்) இழுபறி நீடித்து வருவதையொட்டி பிரதமர் தெராக மே ராஜிநாமா செய்ததையடுத்து அவருக்கு அடுத்தபடியாக போரிஸ் ஜான்ஸன் பிரதமர் ஆனார்.

இதற்கான போட்டியில் இறுதிச் சுற்றுவரை வந்த அவருக்கும், தற்போதைய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெரிமி ஹண்ட்டுக்கும் தபால் மூலம் பதிவான கட்சிக்குழு உறுப்பினர்களின் வாக்கு எண்ணிக்கை விவரங்கள் லண்டனில் செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்டன.

அதன்படி செல்லுபடியான 1,59,120 வாக்குகளில் 92,153 வாக்குகள் போரிஸ் ஜான்ஸனுக்கு ஆதரவாக பதிவு செய்யப்பட்டிருந்தன.

அவரை எதிர்த்துப் போட்டியிட்ட ஜெரிமி ஹன்ட்டுக்கு 46,656 வாக்குகள் மட்டுமே கிடைத்தன. 509 வாக்குகள் நிராகரிக்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் மூலம் 87.5 சதவீத வாக்குகளுடன் போரிஸ் ஜான்ஸன் வெற்றி பெற்றதாக கன்சர்வேடிவ் கட்சிக்குழு தலைவர் செரில் கிலான் அறிவித்தார்.

அதனைத் தொடர்ந்து, கட்சியினரிடையே போரிஸ் ஜான்ஸன் பேசியதாவது:

பிரிட்டனின் இக்கட்டான சூழல்களின்போது கன்சர்வேடிவ் கட்சியைத்தான் மக்கள் நம்பி வருகின்றனர்.

நாட்டு வரலாற்றின் மிக முக்கியமான சூழலில், மக்களுக்கு வேண்டியதை நாம் செய்வோம் என்பது எனக்குத் தெரியும்.

சிறப்பான முறையில் பிரெக்ஸிட்டை நிறைவேற்றுவது, தேச ஒற்றுமையைப் பாதுகாப்பது எதிர்க்கட்சியான தொழிலாளர் கட்சியின் தலைவர் ஜெரிமி கோர்பினின் நோக்கங்களைத் தடுப்பது ஆகிய மூன்றையும் தாரக மந்திரமாகக் கொண்டு செயல்படுவேன்.

கட்சித் தலைவராக என்னைத் தேர்ந்தெடுத்துள்ள உங்களின் நம்பிக்கையை நிறைவேற்ற அரும்பாடுபடுவேன். அதற்கான பணிகள் இப்போதே தொடங்குகின்றன என்றார் போரிஸ் ஜான்ஸன்.

28 நாடுகளை உறுப்பினர்களாகக் கொண்ட ஐரோப்பிய யூனியனிலிருந்து பிரிட்டன் விலகுவது (பிரெக்ஸிட்) தொடர்பான பொது வாக்கெடுப்பு அந்த நாட்டில் கடந்த 2016ஆம் ஆண்டு நடைபெற்றது.

அந்தப் பொதுவாக்கொடுப்புக்கு முன்னதாக, பிரெக்ஸிட்டை ஆதரித்து அப்போதைய லண்டன் மேயராக இருந்த போரிஸ் ஜான்ஸன் தீவிர பிரசாரம் மேற்கொண்டார். பிரெக்ஸிட்டை எதிர்த்து அப்போதைய பிரதமர் டேவிட் கேமரூன் பிரசாரம் செய்தார்.

எனினும், பொதுவாக்கெடுப்பில் பெரும்பான்மையான வாக்காளர்கள் பிரெக்ஸிட்டுக்கு ஆதரவு தெரிவித்தனர். அதையடுத்து டேவிட் கேமரூன் தனது பதவியை ராஜிநாமா செய்தார்.

அவருக்கு அடுத்தபடியாக போரிஸ் ஜான்ஸன்தான் பிரதமர் ஆவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. எனினும், உள்துறை அமைச்சராக இருந்த தெரசா மே அந்தப் பொறுப்பை ஏற்றார்.

எனினும், பிரெக்ஸிட்டுக்குப் பிறகு ஐரோப்பிய யூனியனுக்கும், பிரிட்டனுக்கும் இடையே தொடர வேண்டிய வர்த்தக உறவு குறித்து அந்த அமைப்புடன் தெரசா மே மேற்கொண்ட ஒப்பந்தத்தை பிரிட்டன் நாடாளுமன்றம் 3 முறை நிராகரித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரெக்ஸிட்டுக்குப் பிறகும் பிரிட்டனின் அங்கமான வடக்கு அயர்லாந்துக்கும், அயர்லாந்து நாட்டுக்கும் இடையே வர்த்தக எல்லை வகுக்கப்படாது என்று அந்த ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. தேச ஒருமைப்பாட்டுக்கு எதிரானது என்று பெரும்பாலான எம்.பி.க்கள் கருதுவதால் அந்த ஒப்பந்தம் நிராகரிக்கப்பட்டது.

எனினும், இந்த விவகாரத்தில் எம்.பி.க்களிடையே கருத்தொற்றுமை ஏற்படுத்த முடியாததால், பிரதமர் பதவியிலிருந்து விலகுவதாக தெரசா மே கடந்த மே மாதம் அறிவித்தார்.

அதனைத் தொடர்ந்து அந்தப் பதவிக்கு கன்சர்வேடிவ் கட்சியைச் சேர்ந்த 10 எம்.பிக்கள் போட்டியிட்டாலும் போரிஸ் ஜான்ஸன் தேர்ந்தெடுக்கப்படுவார் என்று பரவலாக எதிர்பார்க்கப்பட்டது.

அந்த எதிர்பார்ப்பபை மெய்ப்பிக்கும் வகையில், தற்போது புதிய பிரதமராக போரிஸ் ஜான்ஸன் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

## கர்நாடகா சட்டப்பேரவை: வாக்கெடுப்பில் எடியூரப்பா வெற்றி, சபாநாயகர் ராஜிநாமா

கர்நாடக மாநிலத்தில் வெள்ளிக்கிழமையன்று புதிய முதல்வராக பதவியேற்ற பி.எஸ். எடியூரப்பா அரசின் மீதான நம்பிக்கை வாக்கெடுப்பில் வெற்றிபெற்றுள்ளார்.

கர்நாடகாவில் நான்காவது முறையாக முதலமைச்சராக பதவியேற்ற எடியூரப்பா சட்டசபையில் உள்ள 105 பாஜக எம்எல்ஏக்களின் ஆதரவையும் பெற்று தனது ஆட்சியை தக்கவைத்துக் கொண்டுள்ளார்.

எடியூரப்பாவின் அரசு, நம்பிக்கை வாக்கெடுப்பில் வெற்றிப் பெற்றதை தொடர்ந்து சபாநாயகர் ரமேஷ்குமார் தனது பதவியை ராஜிநாமா செய்தார்.

முன்னதாக, கர்நாடகாவில் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த எட்டு சட்டமன்ற உறுப்பினர்களும், மதச்சார்பற்ற ஜனதாதளத்தைச் சேர்ந்த மூன்று சட்டமன்ற உறுப்பினர்களும் தங்கள் பதவி விலகல் கடிதத்தை சட்டமன்ற சபாநாயகர் அலுவலகத்தில் அளித்த நிலையில் கர்நாடக மாநிலத்தில் ஆட்சியில் இருந்த காங்கிரஸ் - மதச்சார்பற்ற ஜனதாதள கூட்டணி அரசுக்கு சிக்கல் எழுந்தது.

அதைத்தொடர்ந்து கர்நாடக சட்டசபையில் குமாரசாமி அரசின் மீதான நம்பிக்கை வாக்கெடுப்பு கோரப்பட்டது. நம்பிக்கை வாக்கெடுப்பில் தோல்வியுற்றதால் அவர் தனது முதலமைச்சர் பதவியை ராஜிநாமா செய்தார்.

இந்நிலையில், பி.எஸ்.எடியூரப்பா தலைமையிலான பாரதியஜனதா கட்சி பெரும்பான்மையை பெற்று ஆட்சி அமைத்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்தலாக் மசோதா நிறைவேற்றம்

முத்தலாக் மசோதா கடந்தவாரம் நாடாளுமன்ற மக்களவையில் நிறைவேற்றப்பட்ட நிலையில், நேற்று (செவ்வாய்க்கிழமை) மாநிலங் களவையிலும் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதற்கு பல அரசியல் கட்சிகள் கடும்எதிர்ப்பைக்காட்டின. 11 எம்.பி.க்களைக் கொண்டுள்ள அதிமுக எதிர்த்து கருத்துத் தெரிவித்தது. ஆனால் வாக்கெடுப்பில் பங்கேற்காமல் புறக்கணித்தது.

இந்நிலையில் 99-84 என்ற வாக்கு கணக்கில் இந்த மசோதா மாநிலங்களவையில் நிறைவேறியது.

ஐக்கியஜனதாதளம், தெலங்கானா ரா்ட்ரியசமிதி, தெலுங்குதேசம், ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸ் கட்சி ஆகிய கட்சிகளைச் சேர்ந்த குறைந்தது 25 எம்.பி.க்கள் வாக்கெடுப்பு நடந்தபோது அவையில் இல்லை என்று கூறப்படுகிறது. இவற்றில் ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸ் கட்சி மசோதாவை எதிர்த்து வாக்களிக்கப் போவதாக வெளிப்படையாக அறிவித்திருந்தது.

ஏற்கெனவே நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் முத்தலாக் செல்லாததாக ஆக்கப்பட்டுள்ள நிலையில், குற்றவியல் வரம்புக்குள் முத்தலாக்கை கொண்டு வரும் இந்த சட்டம் தேவையற்றது என்று விமர்சகர்கள் சொல்கிறார்கள்.

சாயிராபானு வழக்கில் ஏற்கெனவே முத்தலாக் செல்லாது என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ள நிலையில், முத்தலாக் சொன்னாலும் அது திருமணமுறிவுக்கு வழிவகுக்காது என்ற நிலையில், இதனை உரிமையியல் பிரச்சனையாக இருந்து குற்றவியல் பிரச்சனையாக மாற்றியிருக்கிறார்கள். இந்த மசோதா நிறைவேறியதால், முத்தலாக் சொல்லும் கணவனுக்கு 3 ஆண்டு சிறைத்தண்டனையும், அபராதமும் விதிக்கப்படும்.

அப்படி சிறையில் இருக்கிற கணவன் எப்படி அந்தப்பெண்ணுக்கு ஜீவனாம்சம் வழங்கமுடியும்? இந்தியாவில் கணவனால் கைவிடப்பட்ட 23.7 லட்சம் பெண்கள் இருக்கிறார்கள் இவர்களில் 0.8 சதவீதம் போ்தான் முஸ்லிம்கள். இந்த கைவிடப்பட்ட பெண்களில் பெரும்பாலோா் இந்துப் பெண்கள்.

பொதுவாக திருமண பந்தத்தில் பெண்களின் உரிமையை பாதுகாக்க வேண்டும் என்பது சரிதான். ஆனால், உரிமையியல் சார்ந்த இந்த விவகாரத்தை குற்றவியல் விவகாரமாக மாற்றியதைத்தான் எல்லோரும் விமர்சிக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.தே.க. வின் புதிய ஜனாதிபதி வேட்பாளர்?

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிடக்கூடிய வேட்பாளர்கள் என கருதப்படுவோர்களின் எண்ணிக்கை நான்காகஅதிகரித்துள்ளது.



ஜனாதிபதி வேட்பாளர் தெரிவில் பிரதமர் ரணில்விக்ரமசிங்க, சபாநாயகர் கரு ஜயசூரிய, அமைச்சர் சஜித்பிரேமதாச ஆகியோருக் கிடையில் ஏற்கனவே போட்டி நிலவுகிறது.

இந்த நிலையில் நான்காவதாக ஐ.தே.க.வின் வேட்பாளர் பட்டியலில் அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்லவும் இணைந்துள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் சந்திமகமகே தெரிவித்துள்ளார்.

அலரிமாளிகையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

ரணில்விக்ரமசிங்கவின் தகவல் அபிவிருத்தி பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த ஊடகவியலாளர்சந்திப்பில் மேலும் தெரிவித்த அவர்,

கட்சிக்குள் நான்கு தகுதியான வேட்பாளர்கள் உள்ளனர். எமது வேட்பாளர் யார் என்ற இறுதி முடிவு பொருத்தமான நேரத்தில் அறிவிக்கப் படும்.

பொதுஜனபெரமுன இன்னமும் தமது வேட்பாளரை அறிவிக்கவில்லை. எனவே ஐ.தே.க.வும்வேட்பாளரை அறிவிக்க அவசரப்படாது.

பொதுஜனபெரமுனவினர்வேட்பாளரைஅறிவித்ததும் நாமும் எமதுவேட்பாளரை அறிவிப்போம்.

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபயராஜபக்ஷவை வேட்பாளராக அறிவித்தால் நாமும் பொருத்தமானவரை அறிவிப்போம்.

இந்நிலையில் சஜித் பிரேமதாசா தான் போட்டியிடுவதாக வெளிப்படையாக தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவுக் கூர்மையில் ஐன்ஸ்டீனை விஞ்சிய 11 வயது தமிழ்ச் சிறுமி

ஒருவரது நுண்ணறிவுக்கூர்மையை (IQ - Intelligence Quotient) அளவிட நடத்தப்படும் தேர்வில் மிக அதிகபட்சமதிப்பீட்டை பெற்று பிரிட்டனில் வாழும் 11 வயதான ஹரிப்பிரியா எனும் தமிழ்ச் சிறுமி சாதனை படைத்துள்ளார்.

உலகின் புகழ்பெற்ற அறிவுக்கூர்மை சோதனை கூடங்களில் ஒன்றாக திகழும்பிரிட்டிஷ்மென்சாவின், "காட்டல் III பி (Cattell III B)" எனும் தேர்வில் பங்கேற்ற பிரிட்டன் வாழ் தமிழ்ச்சிறுமியான ஹரிப்பிரியா, அத்தேர்வின்அதிகபட்சசாத்தியமுள்ள மதிப்பீடான 162 பெற்று சாதனை படைத்துள்ளார்.

அதாவது, ஆல்பர்ட்ஐன்ஸ்டீன், ஸ்டீபன்வில்லியம் ஹாக்கிங்ஸ் போன்ற பிரபல அறிவியலாளர்களின் அறிவுக்கூர்மை மதிப்பீட்டை விட இவர் இரண்டு எண்கள் அதிகமாக பெற்றுள்ளார்.

அதே போன்று, பிரிட்டிஷ்மென்சாவின் மற்றொரு அறிவுக்கூர்மை தேர்வான "கல்சர் பார் (Culture Fair Scale)" என்பதிலும்அதிகபட்சமதிப்பீடான 140ஐ பெற்று அசத்தியுள்ளார்.

பிரிட்டனின் உளவு நிறுவனமானஆஐ6இல் இணைந்து பணியாற்றுவதே தனது நோக்கம் என்று கூறுகிறார் ஹரிப்பிரியா.

"நான் சிறுவயதில் மருத்துவராகவும், ஆசிரியாகவும் அல்லது விண்வெளி வீராங்கனையாகவும் விளங்க விரும்பிய நிலையில், சமீபகாலமாக உளவு சம்பந்தமான புத்தகங்களை அதிகம் படித்து வருவதால்ஆஐ6 உளவு அமைப்பில் சேர்ந்து பணியாற்ற விரும்புகிறேன்.

எதிர்காலத்தில் இதுகூட மாறுமா என்று எனக்கு தெரியவில்லை. ஆனால், எதை செய்வதாக உறுதிபடமுடிவெடுக்கிறேனோ அதில் நான் சாதிப்பேன் என்ற நம்பிக்கை உள்ளது"என்று ஹரிப்பிரியா கூறுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 48 நாடுகளை சேர்ந்தவர்களிற்கு ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் முக்கிய அறிவிப்பு

இந்தியா, ஐக்கிய அமெரிக்கா, இங்கிலாந்து, ஜப்பான், சிங்கப்பூர் உள்ளிட்ட 48 நாடுகளுக்கு கட்டணமற்ற வீசாக்களை பெற்றுக்கொடுக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்த நடவடிக்கைகள் நாளை முதல் அமுல்படுத்தப்படும் என்றும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள சகல நாடுகளுக்கும் எதிர்வரும் ஆறு மாதங்களுக்கு கட்டணமற்ற முறையில் வீசாக்களை பெற்றுக்கொள்ள கூடியதாக இருக்கும் என்று சுற்றுலாத்துறை அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சர் ஜோன்அமரதுங்கஅறிவித்துள்ளார்.

மேற்குறிப்பிடப்பட்டநாடுகளுடன்ஆஸ்திரியா, அவுஸ்திரேலியா, பெலிஜியம், பெல்காரியா, கனடா, கம்போடியா, சீனா, கொராடியா, சைப்ரஸ், டென்மார்க், எஸ்டோனியா. பின்லாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, க்றீஸ், ஹங்கேரி, இந்தோனிசியா, ஐஸ்லாந்து, அயர்லாந்து, இஸ்ரேல், இத்தாலி, லட்வியா, லிதுஹானியா, லக்ஸம்பேர்க் ஆகிய நாடுகளும் உள்வாங்கப்பட்டுள்ளன.

மேலும் மலேசியா, மல்டா, நெதர்லாந்து, நியூசிலாந்து, நோர்வே, பிலிபைன்ஸ், போலந்து, போர்த்துக்கல், ரோமானியா, ர்'யா, சிங்கப்பூர், தென்கொரியா, ஸ்லோவானியா, ஸ்பெயின், சுவிடன், சுவிஸ்லாந்து, தாய்லாந்து , செக் குடியரசு, ஸ்லொவொக் குடியரசு மற்றும் உக்ரைன் ஆகிய 48 நாடுகளுக்கே இவ்வாறு கட்டண மற்ற வீசாக்கல் வழங்கப்படவுள்ளன.

இந்நிலையில் குறித்த நாடுகளுக்கானவீசாக்களை தற்போது இணையத்தளத்தினூடாகவும் பெற்றுக்கொள்ள முடியும். அதற்காக www.eta.lkஎன்ற இணையத்தளத்தினூடாக வீசாக்கான விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ளவும் முடியும். எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழினி தகவல் களஞ்சியம் தமிழகத்தில் ஸ்ரீராகவேந்திரா அச்சகம், 15/8, சுவாமி ஆச்சாரி தெரு, இராயப்பேட்டை, சென்னை–14ல் அச்சிடப்பட்டு, யூலை 3ம் திகதி 2019 இலங்கை, இந்தியா, இலண்டனில் விநியோகிக்கப்படுகின்றது. ஆசிரியர்: திரு. வ..மா. குலேந்திரன் இணை ஆசிரியர்: திரு பிரியராம் சிவம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் நடந்தேறிய பதவி விலகல், பதவியேற்பு நாடகங்கள்! விழித்து கொள்வார்களா மக்கள்?

இலங்கைத்தீவில் கடந்த ஏப்ரல் 21ஆம் திகதி இடம்பெற்ற ஐ.எஸ்ஸின் கந்தக நாசகாரத் தாக்குதலுக்குப் பின்னர் முஸ்லிம் அரசியல் உருவாக்கப்பட்ட இரசாயன மாற்றங்களில் இன்னொரு யூ வடிவத்திருப்பம் இடம்பெற்றுள்ளது. அந்தவகையில் ஐ.எஸ்ஸின் கந்தகநாசகாரத்துடன் முடிச்சுப்போட்டு இலங்கைத்தீவின் முஸ்லிம் அரசியல்வாதிகள் மீது சுட்டுவிரல் நீட்டப்பட்டுசெயற்கைத்தனமாகஉருவாக்கபட்ட பதவி விலகல்களின் இன்னொரு அத்தியாயம் இடம்பெற்று முடிந்தது.

அந்த அத்தியாயத்தின்படி அத்துரலியரத்னதேரர் என்ற பௌத்தஹீரோபிக்கு கடந்த மே மாதத்தின் இறுதி முதல் யூன்மாதத்தின் ஆரம்பம்வரைகண்டியில் காட்டிய உண்ணாவிரதப்போராட்டம் என்ற உணர்வு சாகசகாட்சிக்கு முன்னால் தாக்குப்பிடிக்க முடியாத முஸ்லிம் அரசியல் கதாநாயகர்கள் தமது பதவிவிலகல்அரங்கக்காட்சிகளைஅரங்கேறினர்.

அன்றைய நாளில் சிங்களபௌத்தர்களின் திடீர் ஹீரோவான அத்துரலியர்பௌத்த கடும்போக்குத்தளத்தில் உள்ள ஏனைய முகங்களை பின்னுக்கும் தள்ளியிருந்தது. அன்று அத்துரலியரின்ஸரண்ட் போராட்டத்தை தொடர்ந்து, யூன் 3 இல் பொதுபலசேனா உள்ளிட்ட அமைப்புக்கள் ஒன்று திரண்டு பாரிய போராட்டமொன்றை முன்னெடுக்க திட்டமிட்டதும் காட்சிமாறியது. அசாத்சாலி மற்றும் ஹிஸ்புல்லா ஆகிய மைத்தரியின் தெரிவுக்குரிய ஆளுனர்களும் ரணில் அரசாங்கத்தின் தெரிவுக்குரிய முஸ்லிம் அமைச்சக முகங்களும் தத்தமது பதவிகளைத் துறந்தனர்.

பதவிவிலகியவர்கள் அனைவரும் ரணில்அரசாங்கத்துக்கு ஒரே ஒரு மாத அவகாசம் கொடுத்தார்கள். அந்த ஒரு மாத காலத்துக்குள் முஸ்லீம் அரசியல்வாதிகள் மீதான விசாரணைகள் நடத்தி முடிக்கப்படவேண்டும் என்ற கோரிக்கையும்விடுக்கப்பட்டது. ஆயினும் வெவ்வேறு கட்சிகளாக இருந்தாலும் முஸ்லிம் அடையாளம் என்ற அடிப்படையில் முஸ்லிம் அமைச்சர்கள் அனைவரும் கூட்டாக தமது பதவிகளை துறந்தமை இலங்கை வரலாற்றில் புதிசு கண்ணா... புதிசுபாணியில் இடம்பெற்றது. முஸ்லிம் அமைச்சர்களின் இந்தகூட்டுப்பதவிவிலகல் குறித்து பேசிக்கொண்டதமிழர்களும்பாருங்கள்முஸ்லிம்அரசியல்வாதிகளின் ஒற்றுமையை நம்மவர்களும்இருக்கின்றார்களே என முன்மாதிரி சலிப்பு சிலாகிப்புக்களை செய்தனர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தநிலையில் இவ்வாறு பதவி விலகியவர்களில் இருவர் கடந்த சிலநாட்களுக்கு முன்னர் பதவியேற்றனர். அதன்பின்னர் இரண்டாம் கட்டப்பதவி ஏற்பு நேற்று இடம்பெற்றது. நேற்று முன்தினம் ரணிலுடன் நடத்திய பேச்சுக்களுக்குப் பின்னர் இவர்கள் அனைவரும் தமது அமைச்சுப் பொறுப்புக்களை எடுத்தனர். அந்தவகையில் முஸ்லிம் கொங்கிரசிலிருந்து ரவூப்ஹக்கீம் அகில இலங்கை மக்கள் கொங்கிரசிலிருந்து ரிஷாட்பதியுதீன் உட்பட்ட சிலர் தத்தமதுமுன்னையபொறுப்புகளை நேற்று மாலை மைத்திரிக்கு முன்னர் ஏற்றனர்.

ஆயினும் மூன்றாம் கட்டபதவியேற்பு நகர்வுக்கும் இடமிருப்பதை நேற்றைய பதவியேற்பு நிகழ்வில் இடம்பிடிக்காத எச்.எம்.எம்.ஹரீஸ், அலிசாஹிர்மௌலானா, பைசல்காசிம் ஆகிய 3 முகங்களின் தாமதம் உறுதிப்படுத்தியுள்ளது. இவர்களின் தாமத்துக்கு கல்முனை, தோப்பூர் விடயங்களின் கொதிநிலை காரணமெனவும் கூறப்படுகிறது.

ஆனால் இப்போது ஒரு வினாவுக்கு மட்டும் துல்லியமான விடையில்லை. முல்லிம் அமைச்சர்கள் அனைவரும் தமது பதவிவிலகலின் போது கோரியது போல அவர்கள் மீது (உயிர்த்த ஞாயிறு)தாக்குதல் சம்பவம் தொடர்பான விசாரணைகள் சரியான முறையில் நடத்தப்பட வில்லை.

ஏனெனில் விசாரணைகளைநடத்தவேண்டிய அளவுக்கு யாரும்பௌத்தசண்டியர்கள் உட்பட யாரும்அவர்கள் மீது ஆதாரபூர்வமான முறைப்பாடுகளை செய்யவும் இல்லை. அதாவது ஐ.எஸ்ஸின் கந்தக நாசகாரத்தாக்குதலுக்குப் பின்னர் சகட்டுமேனிக்கு முஸ்லீம் மக்கள் மீதான இனவாத அடக்கு முறையின்ஒரு அடிப்படையில் சிங்கள, பௌத்த இனவாத சக்திகளின் காழ்ப்புணர்வில் இந்த சுட்டுவிரல் நீட்டல் இடம்பெற்றதென்பது நிருபிக்கப்பட்டது.

ஆனால் இப்போது இந்த பதவியேற்புகளில் ஒரு விடயம் மட்டும் தெளிவாக பளிச்சிடுகிறது. அதாவது இலங்கைத்தீவின் தேர்தல் களம்களை கட்டுவதால் அமைச்சபொறுப்புவழங்கும்உரித்துக்களுடன் மீண்டும் தமது அதிகாரத்தை தக்க வைக்கும் நோக்குடன் தான் முஸ்லீம் அமைச்சர்கள் மீண்டும் தமது பதவியேற்புநகர்வுகளை செய்திருப்பது தெரிகிறது.

ஏனெனில் பொதுவாகவேஇலங்கைத்தீவில் உள்ள முல்லிம்களின் அரசியல் போக்கில், பதவியில் இருந்தால்தான்,மக்களின் உரிமைகள் குறித்து பேச முடியும் அதனைப்பெற முடியும் என்ற தோற்றப்பாடு உள்ளது . ஆகையால் தாம் அரசாங்கத்துடன் இணைந்து பதவியில் இல்லாவிட்டால் மக்களுக்கு எதையும் செய்யமுடியாது என்ற தோற்றப்பாட்டை இவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்தாலும் மக்களுக்கு ஏதாவது செய்யப்பட்டதோ இல்லையோ தமக்குரியவற்றை பெற முடியாது என்பதை அவர்கள் தெளிவாகவே புரிந்துவைத்துள்ளனர்.

இந்த புரிதலுக்கு ஆதாரமாக 1989இல் முதன் முதலில் நாடாளுமன்றத்துக்கு உந்துருளி ஒன்றில் சென்ற ஹிஸ்புல்லாவும். வடக்கில் இருந்து ஒரு அகதியாக ஒரு பையுடன் வந்தேன் எனக்கூறும்ரிஷாட்பதியுதீனும் இன்று பெரும் கோடிஸ்வரர்கள். அதேபோல இந்த பதவியேற்புகள் மூலம் ஐ.எஸ்ஸின்கந்தகநாசகாரத்தாக்குதலுக்குப்பின்னர்முஸ்லிம் மக்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களுக்குரியநீதியோ அல்லது அதற்குரிய பொறுப்புக் கூறலோ கொழும்பு அதிகார மையத்தில் இருந்து முறையாக வெளிவர வில்லை.

இதேபோல தாக்குதலுக்குப்பின்னர்சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டமுஸ்லிம்இளைஞர்களில்குற்றமற்றவர்கள் அனைவரும் விடுவிக்கப்பட்டனரா? என்பதும் இன்னொருவிடயம்

இதனால் முஸ்லிம் அமைச்சர்களின் பதவி விலகல்களும் பதவியேற்புகளும் ஒரு அரசியல் நாடகத்தின் இருவேறான அங்கங்களே! இப்போது பதவியேற்புகள் இடம்பெற்றுவிட்டன இனியென்ன நடக்கும்? விரைவில் களைகட்டக்கூடிய தேர்தல் பரப்புரைக்களத்தில் முஸ்லிம் மக்களின் முன்னால் இவர்கள் அனைவரும் தம்மைத்தாமே நாயகர்களாக சித்தரிப்பார்கள். மறுபுறத்தேசிங்கள மக்களின் வாக்குகளால் வெற்றியடையவேண்டிய முஸ்லீம் வேட்பாள முகங்கள் தலதாமாளிகைக்கு ஒருமுறை விஜயம் செய்து மகாநாயக்கதேரர்களின் காலில் விழுந்தால் அதுவும் சமரசப்படக்கூடும். ஆகமொத்தம் பதவி விலகல்களும் பதவியேற்புகளும் சுயலாபஅரசியல் பாதி! மக்களுக்கு மீதி!! என்ற காட்சிப்படுத்தல்களுடன் தொடர்புடையவைஎன்பதையும் மறுக்க முடியாது.

நன்றி: **IBC**

## யாழ் புத்தகத் திருவிழா

வடமாகாண ஆளுநர் கலாநிதி சுரேன்ராகவன் அவர்களின் எண்ணக்கருவிற்கு அமைய இலங்கை புத்தக விற்பனையாளர்கள் , இறக்குமதியாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்கள் சங்கத்தின் ஏற்பாட்டில் ஷயாழ்புத்தகத் திருவிழா 2019 ஷ எதிர்வரும் ஆகஸ்ட் 27ஆம் திகதி முதல் செப்டம்பர் 1ஆம் திகதி வரை யாழ்வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. மிகப்பிரமாண்டமாக இடம்பெறவுள்ள இந்த புத்தகக்கண்காட்சியில் பாடசாலை மாணவர்களுக்கானபுத்தகங்கள், ஈழத்துப்படைப்புக்கள் உள்ளிட்ட உள்ளூர் மற்றும் இந்திய மூத்த எழுத்தாளர்களின் புத்தகங்களும் காட்சிப்படுத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்மட்ட நடுத்தர வருமானம் பெறும் நாடு என்பது வெறும் மாயை மட்டுமே!

இவ்வருடம்ஜூலை முதலாம் திகதி உலக வங்கியானது இலங்கையை ஒரு உயர்மட்ட நடுத்தர வருமானம் பெறும் நாடாக தரமுயர்த்தி அட்டவணைப்படுத்தியது. அதாவது இலங்கை இனிமேலும் ஒரு வறிய நாடல்ல என்பதே இதன் கருத்தாகும்.

உலக வங்கியானதுஉலகிலுள்ளநாடுகளை அவற்றின் டொலர் பெறுமதியிலானதனக்குரிய மொத்த தேசிய வருமான (புவே)த்தின் அடிப்படையில் வகுப்பாக்கம் செய்து நான்கு பிரதான வகுதிகளாக வருடாவருடம் ஜூலை மாதம் அப்பட்டியலை வெளியீடு செய்கிறது. இதன்படி உலக நாடுகள் பின்வரும் வகுதிகளாகப்பிரிக்கப்படுகின்றன.

1. **குறைந்த வருமானம் பெறும் நாடுகள்**
2. **கீழ் மட்ட நடுத்தர வருமானம் பெறும் நாடுகள்**
3. **உயர்மட்ட நடுத்தர வருமானம் பெறும் நாடுகள்**
4. **உயர்மட்ட வருமானம் பெறும் நாடுகள்**

2019 ஜூலை முதலாம் திகதி வெளியிடப்பட்ட பட்டியல் 2018ம் ஆண்டு நாடுகளின் தனக்குரிய மொத்த தேசிய வருமானத்தின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டதாகும். கடந்த ஆண்டில் உலகவங்கி வெளியிட்ட பட்டியலுக்கு ஆதாரமாக அமைந்த வருமானவகுதிகளும் இவ்வருடம் அது இற்றைப்படுத்தப்பட்ட விதமும் கீழேயுள்ள அட்டவணையில் காட்டப் பட்டுள்ளன.

2018 ஆண்டு வெளியிடப்பட்டபட்டியலின் படி இலங்கையின் தனக்குரிய மொத்தத் தேசிய வருமானம் 3840 டொலர்களாக இருந்தது. எனவே அதனால் நடுத்தர உயர்மட்டவருமான நாடு என்ற அந்தஸ்தைப் பெற முடியவில்லை. ஆனால் 2019ம் ஆண்டில் வெளியிடப்பட்ட தரவுகளின்படி இலங்கையின் தலைக்குரியமொத்தத் தேசிய வருமானம் (2018 ஆண்டு தரவு) 4060 டொலர்களாக மதிப்பிடப்பட்டது. இதன்படி 3996 டொலர்கள் என்னும் மட்டத்தை விஞ்சியதால் உயர்மட்ட நடுத்தர வருமானம் பெறும் நாடு என்றும் அந்தஸ்தை இலங்கை அடைந்துள்ளது. இலங்கையோடு இணைந்து ஜோர்ஜியா, கோசோவோ ஆகிய நாடுகளும் அந்த அந்தஸ்துக்கு முன்னேறியுள்ளன.

இவ்வாறு வருமானமட்டத்தரவரிசையில்முன்னேறுவதன் மூலம் ஒரு நாடு பெருமையடைய முடியும். என்றாலும் அதன் உண்மையான நிலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறித்து விமர்சனங்கள் பலவுண்டு. ஒரு நாடு கீழ்மட்ட நடுத்தர வருமான நாடு என்ற அந்தஸ்தை எட்டிய உடனேயே சர்வதேச ரீதியில் வறிய நாடுகளுக்கு வழங்கப்பட்ட சலுகைகளை இழக்க நேரிட்டது. குறிப்பாக சர்வதேச நிறுவனங்கள் வழங்கும் சலுகைக்கடன்கள் மானியங்கள் பொருளுதவிகள் போன்றவற்றை முற்றாக இழக்க நேரிடும். தற்போது மேல்மட்ட நடுத்தர வருமான நாடு என்னும் அந்தஸ்தை எய்தினால் எஞ்சியிருந்த அற்பசொற்ப சலுகைகளையும் முற்றாக இழக்க நேரிடும்.

வளர்முகநாடுகளாகபார்க்கப்பட்ட நாடுகளுக்கு வழங்கப்படும் புளுவூ போன்ற சலுகைகளை இழக்க நேரிடலாம். சர்வதேச நிதிச்சந்தையில் சந்தை அடிப்படையிலான கடன்களைளயேபெறமுடியும். அவற்றின் வட்டி வீதங்கள்உயர்வாகவும் மீள் செலுத்தும் காலம் குறைவாகவும் இருக்கும். இதனால் கடன் தேவைளுக்காகசீனா போன்ற கந்து வட்டி கந்தன்களிடம் கையேந்த நேரிடும். சர்வதேச நிதி நிறுவனங்களாகிய உலக வங்கி, சர்வதேச நாணயநிதியம் போன்ற வளர்ந்த நாடுகளாக இவற்றை பார்ப்பதால் திட்டக்கடன்களை வழங்க தயக்கம் காட்டலாம். அவற்றின் செயற்றிட்டங்கள் வறிய மற்றும் குறைந்த வருமானம் பெறும் நாடுகளுக்கே முன்னுரிமை வழங்கும்.

எனவே நாம் ஒரு உயர்மட்ட நடுத்தர வருமானம் பெறும் நாடாக முன்னேறி விட்டோம் என்று அதிகம் மகிழ்ச்சியடைய முடியாது. சட்டியில் நீர் நிரப்பப்பட்டு அடுப்பில் வைக்கப்பட்டுதீமூட்டப்பட்ட நிலையில் அதில் விடப்பட்ட நண்டு ஆரம்பத்தில் நீரின்வெதுவெதுப்பானசூட்டில் ஆனந்த நீச்சல் போடுவது போன்றது தான் இந்த அற்ப சந்தோசமும்.

விழித்துக் கொண்டு உடனடியாக செயற்படாவிட்டால் அபாயம் காத்திருக்கிறது. ஏதோ 36 டொலர்கள் அதிகம் பெற்ற காரணத்தினால் உயர்மட்ட நடுத்தர வருமான அந்தஸ்து என்ற வகுதிக்குள்வந்தாகி விட்டது. ஆயினும் அடுத்த கட்டமாகியஉயர்மட்ட வருமானம் பெறும் நாடாக மாறவேண்டுமாயின் 12, 375 டொலர்களை விட அதிகம் பெற வேண்டும். இது ஏற்பட நீண்டகாலம் செல்லும். எனவே நடுத்தர வருமான நாட்டு அந்தஸ்து பொறிக்குள் சிக்கி சின்னாபின்னமடைய நேரிடும். இதனைத் தவிர்க்க முடியாது மறுபுறம் தலைக்குரிய மொத்த தேசிய வருமானம் ஒரு நாட்டு மக்களின் வாழ்க்கைத்தரத்தையோ பொருளாதார மேம்பாட்டையோ அல்லது அந்த நாட்டின் சமூக நலனையோ சர்வதேச ரீதியில் அதன் அந்தஸ்தையோவெளிப்படுத்தக் கூடிய ஒன்றல்ல. மாறாக அது பருமட்டான ஒரு அளவை மாத்திரமே.

ஒரு நாட்டின் உழைத்த மொத்த வருமானத்தைஅந்நாட்டின் ஒரு ஆண்டு சனத்தொகையினால்பிரிப்பதன் மூலம் தலைக்குரிய மொத்த தேசிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருமானம் பெறப்படுவது ஐக்கிய அமெரிக்கடொலர்களில் அது வெளிப்படுத்தப்படுகிறது.

அதாவது மொத்தமாக நாட்டின் வருமானத்தில்ஒவ்வொருவரும் பெறும் பங்கு எவ்வளவு என்பதை அது குறிப்பிடுகிறது. அன்று பிறந்த குழந்தைக்குரியபங்கும் இதில் உள்ளடங்கும்.

2019 வகுப்பாக்கத்தின் படி இலங்கையின்தலைக்குரிய மொத்த தேசிய வருமானம் 4060 டொலர்களாகும். இன்றைய டொலர்நாணய மாற்று மதிப்பீட்டின் படி இலங்கை ரூபாவில் இதன் பெறுமதி சுமார் 714560 ரூபாவாகும். இதனை மாதாந்த அடிப்படையில் நோக்கினால். 59,546 ரூபாவாகும். அதாவது சராசரியாக இலங்கையரொருவர் கிட்டத்தட்ட 60000 ரூபாவை மாதாந்த வருமானமாகப் பெறுகிறார் என்பது இதன் கருத்தாகும். ஆனால் அப்படிப்பட்ட சமமான வருமானப் பங்கீடு இலங்கையில் இருக்கிறதா?

இலகு மொழியில் கூறுவதாயின் இலங்கையில் உழைக்கப்படும் தேசிய வருமானத்தில் அரைவாசிக்கும் மேற்பட்ட அளவினை மிகச் செல்வந்த மேட்டுக்குடிகளாகிய சமூகத்தின் 20 வீதமானோர் ஆண்டு அனுபவிக்கின்றனர். அதேபோல மிக வறிய, பஞ்சப்பரதேசிகளாகிய சமூகத்தின் 20மூ மானோர் 5 சதவீதவருமானப் பங்கினையே பெறுகின்றனர். ஆகவே வருமானப்பங்கீட்டில் மிகமோசமான ஏற்றத்தாழ்வுகள் நிலவுகின்றன.

இலங்கையின் குடித்தொகையில் சுமார் மூன்றில் ஒரு பகுதியினர் சமுர்த்திப் பயனாளிகளாக உள்ளனர் இன்னும் 600,000 பேரை அதில் இணைத்துக் கொள்ளவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கை ஒரு உயர் மட்ட நடுத்தர வருமானம் பெறும் நாடாக பரிணமித்ததாயின்சமுர்த்திநிவாரணங்கள் குறைய வேண்டுமேயன்றி அதிகரிக்க கூடாது. பிராந்திய ரீதியிலான வறுமை கடும் வறுமை என்பதாகக் காணப்படுகின்றது. ஒருபோதும் இல்லாதவாறு பட்டினிச்சாவுகளும் அண்மைக் காலத்தில் நிகழ்ந்துள்ளன.

வறுமைக்குறிகாட்டிகள்முன்னேற்றங்களைக்காட்டுவதாக எடுத்துக் கொண்டாலும் இன்னும் நாட்டில் பாதிக்கப்பட்ட நிலையில் அடிப்படை வசதிகளற்ற நிலையில் கணிசமான தொகையினர் உள்ளனர். குறிப்பாக யுத்த பூமிகளாக விளங்கிய பகுதிகளில் இத்தகைய சூழல் அச்சம் நிலவுகிறது.

மறுபுறம் சர்வதேச ரீதியில் ஒரு நாட்டின் சமூக பொருளாதார அந்தஸ்தை காட்டும் ஒரு குறியீடாக ஒரு நாட்டின் கடவுச்சீட்டுக்கு உள்ள ஏற்றுக்கொள்ளப்படும் தன்மையைக் குறிப்பிடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள் நுழைவு அனுமதிகளை (வீசா) இலவசமாக வழங்க வெளிநாட்டவர்களை "வாங்கோவாங்கோ" என்று இலங்கை கூவிக்கூவி அழைக்கிறது. எனினும் 30 மைல் தூரத்தில் உள்ள இந்தியாவுக்கு இலங்கை கடவுச் சீட்டு உள்ளவர்களால் உள் நுழைவு அனுமதியை இலவசமாக பெறக்கூடியதாக இல்லை. மேலும் இலகுவாகத்தான் அங்கே செல்ல முடியுமா? எந்த நாட்டில் இலங்கைக்கடவுச் சீட்டு மதிப்போடு நோக்கப்படுகிறது?

ஆகவே உயர்மட்ட நடுத்தர வருமானம் பெறும் நாடு என்ற அந்தஸ்து வெறுமனே ஒரு மாயை மட்டுமே.

**கலாநிதி எம். கணேசமூர்த்தி,**
பொருளியல்துறை,
கொழும்புப் பல்கலைக்கழகம்

# 58 பழமையான சட்டங்களை நீக்குவதற்கான மசோதா மக்களவையில் நிறைவேற்றம்..!!

மோடி தலைமையிலான அரசு 2-வது முறையாக பொறுப்பேற்ற பிறகு முதல் பாராளுமன்ற கூட்டத்திலேயே பெரும்பாலான மசோதாக்களை தாக்கல் செய்து நிறைவேற்றி வருகிறது.

அந்த வகையில் இன்று மக்களுக்கு பயன்படாமல் இருக்கும் பழமையான 58 சட்டங்களைநீக்குவதற்கானமசோதாவை தாக்கல் செய்து நிறைவேற்றியுள்ளது.

நீக்குதல் மற்றும் திருத்தம் மசோதா 2019-ஐ சட்டத்துறை அமைச்சர் ரவி சங்கர்பிரசாத் இன்று மக்களவையில் தாக்கல் செய்து பேசினார். அப்போது பா.ஜனதா ஆட்சிக்கு வந்த பிறகு 1428 பழைய மற்றும் தொன்மையான சட்டங்கள் நீக்கப்பட்டுள்ளன.

இன்று மட்டும் 58 பழைய சட்டங்களை நீக்கம் செய்வதற்கான மசோதாவை தாக்கல் செய்துள்ளோம். 1950 முதல் 2004 வரை 1929 பழைய சட்டங்கள் மட்டுமே அகற்றப்பட்டன. இதில் பெரும்பலான சட்டங்கள் பிரிட்டிீ காலத்தில் உருவாக்கப்பட்டவையாகும்" என்றார்.

இந்த மசோதா மீதான விவாதத்தில் கலந்து கொண்ட காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரானசசிதரூர் அரசின் இந்த முயற்சி பாராட்டத்தக்கது. என்றாலும், அரசு அவசர அவசரமாக மசோதாக்களை தாக்கல் செய்து பின்னர் நீக்குவது கவலை அளிக்கிறது" என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு தொழில் அதிபராக போராடி தோற்று விட்டேன்- சித்தார்த்தா எழுதிய உருக்கமான கடிதம்..!!

க.்.பே காபி டே நிறுவனர் விஜிசித்தார்த்தா மாயமானார். காரில் நேத்ராவதி நதி வரை சென்ற அவர் திடீரென காரை விட்டு இறங்கிச் சென்று மாயமானார். உடன் வந்த காரின் ஓட்டுநர், சித்தார்த்தாவை செல்போனில் தொடர்பு கொண்ட போது சுவிட்ச்ஆப் செய்யப்பட்டு இருந்தது.

இதையடுத்து, குடும்பத்தினர் மற்றும் போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. மாயமான விஜிசித்தார்த்தாவை தேடும் பணி நேத்ராவதி ஆற்றில் தீவிரமாக நடைபெற்று விஜிசித்தார்த்தா கர்நாடக முன்னாள் முதல் மந்திரி எஸ்.எம். கிருஷ்ணாவின் மருமகன் ஆவார்.

விஜிசித்தார்த்தாவைதேடும் பணி மும்முரமாக நடைபெற்று வரும் நிலையில், தனது நிறுவன ஊழியர்களுக்கு விஜிசித்தார்த்தா கடிதம் எழுதியதாக செய்திகள் வெளிவந்துள்ளன.

தற்கொலை முடிவை எடுத்து விட்டது அவர் எழுதியுள்ள உருக்கமான கடைசி கடிதம் மூலம் தெரிய வந்துள்ளது. அந்த கடிதத்தில் அவர் எழுதி இருப்பதாவது:-

நமது நிறுவனபோர்டுஇயக்குனர்களுக்கும் மற்றும் காபி டேகுடும்பத்தினருக்கும் நான் எழுதி கொள்வது.

## விஜிசித்தார்த்தா

கடந்த 37 ஆண்டுகளாக மிகவும் கடினமாக உழைத்து நமது காபி டேநிறுவனத்தில் 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வேலைவாய்ப்புகளை உருவாக்கி உள்ளோம். அது போல தொழில்நுட்பநிறுவனத்திலும் அதிக பங்குகளுடன் 20 ஆயிரம் வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தி இருக்கிறோம். ஆனால் இந்த நிறுவனங்களை மிகவும் லாபகரமான தொழில் நிறுவனங்களாக மாற்றுவதில் நான் தோல்வி அடைந்து விட்டேன்.

அனைத்தையும் நான் இழந்து விட்டேன் என்பதை சொல்லி கொள்ள நினைக்கிறேன். என்னை நம்பி இந்த தொழிலுக்கு வந்த அனைவரிடமும் நான் மன்னிப்பு கேட்டுக்கொள்கிறேன். நீண்ட நாட்களாக நான் நிதி நெருக்கடியில் போராடினேன்.

நான் விற்பனை செய்த பங்குகளை திரும்ப பெற கோரி மிகப்பெரிய நெருக்கடி ஏற்பட்டது. அந்த நெருக்கடியை என்னால் தாங்கி கொள்ள இயலவில்லை. கடன் கொடுத்த மற்றவர்களும் என்னை கடும் நெருக்கடிக்குஉள்ளாக்கினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கிடையே வருமானவரித்துறையின் ஓய்வு பெற்ற அதிகாரியின் மூலமும் நான் கடும் துன்புறுத்தலுக்குஉள்ளானேன். அவரால் நம்முடைய தொழில் நுட்ப நிறுவனத்தின் பங்குகள் 2 தடவை முடக்கப்பட்டன. இதைத் தொடர்ந்து காபி டே நிறுவனத்தின் பங்குகளையும் கையகப்படுத்து கிறார்கள்.

வருமானவரித்துறை கூறியதை செலுத்திய பிறகும் நமது நிறுவன பங்குகளை தொடர்ந்து முடக்கி விட்டனர். இது நியாயமற்றது. இதனால்தான் நமது நிறுவனங்களில் கடும் நிதி நெருக்கடி உருவாகி விட்டது.

இனி புதிய நிர்வாகத்தின் கீழ் நீங்கள் அனைவரும் மிக வலிமை யோடு தொடர்ந்து பணிபுரிய வேண்டும் என்று இதயபூர்வமாக கேட்டுக்கொள்கிறேன். நமது நிறுவனத்தில் நடந்த அனைத்து தவறுகளுக்கும் நான் மட்டுமே பொறுப்பாகும். ஒவ்வொரு நிதி பரிமாற்றத்துக்கும் நானே பொறுப்பு ஏற்றுக்கொள்கிறேன்.

என்னுடைய குழு, தணிக்கையாளர்கள் மற்றும் நிறுவனத்தின் மூத்த உறுப்பினர்கள் ஒருவருக்கு கூட எனது நிதி பரிமாற்றம் பற்றி தெரியாது. எனவே இந்த விவகாரத்தில்சட்டத்துக்கு நான் மட்டுமே பொறுப்பாவேன்.

நமது நிறுவனங்களில் நடந்த நிதி பரிமாற்றம் மற்றும் நிதி நெருக்கடி போன்ற விவரங்களை எனது குடும்பத்தினர் உள்பட அனைவரிடமும் நான் தெரியாமல் மறைத்து விட்டேன். யாரையும் ஏமாற்ற வேண்டும் என்றோ அல்லது தவறாக வழி நடத்த வேண்டும் என்றோ நான் விரும்ப வில்லை.

ஒரு தொழில் அதிபராக நான் போராடி தோற்று விட்டேன். இதை உங்களுக்கு நான் தெளிவாக உணர்த்தி விட்டேன். என்றாவது ஒருநாள் இதை நீங்கள் அனைவரும் புரிந்து கொண்டு என்னை மன்னிப்பீர்கள் என்று நம்புகிறேன்.

இந்த கடிதத்துடன் நமது நிறுவனங்களின் சொத்துக்கள், அவற்றின் மதிப்புகள்அனைத்தையும் தனித்தனியாக மதிப்பீடு செய்து கொடுத்துள்ளேன். அதன்படிஒவ்வொருவருக்கும் நமது கடனை மற்றும் பங்குகளை திருப்பி கொடுக்க முடியும்.

இவ்வாறு அந்த கடிதத்தில் சித்தார்த்தா எழுதி உள்ளார். தனது கையெழுத்துக்கு கீழ் அவர் 27-7 என்று குறிப்பிட்டு இருக்கிறார். இதன் மூலம் சனிக்கிழமையே அவர் தற்கொலை கடிதத்தை தயார் செய்து விட்டது தெரிய வந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2ஜி மேல்முறையீட்டு மனுவை அவசரமாக விசாரிக்க முடியாது - டெல்லி ஐகோர்ட்டு மறுப்பு..!!

தி.மு.க. பங்கேற்ற ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசில் 2ஜி ஸ்பெக்ட்ரம் அலைவரிசை ஒதுக்கீட்டில் முறைகேடு நடந்ததாகசி.பி.ஐ.யும், அமலாக்கத்துறையும் தனித்தனியாக வழக்குகள் பதிவு செய்து விசாரணை நடத்தின.

இந்த வழக்குகள் டெல்லியில் உள்ள சி.பி.ஐ. தனிக்கோர்ட்டில் நடைபெற்று வந்தன. முன்னாள் தொலைத்தொடர்பு துறை மந்திரி ஆ.ராசா, தி.மு.க. எம்.பி. கனிமொழி, ஸ்வான்டெலிகாம்நிறுவன தலைவர் 'ரகித்உஸ்மான்பல்வா உள்ளிட்ட 19 பேர் மீது குற்றம் சாட்டப்பட்டு இருந்தது.

இந்த வழக்குகளை விசாரித்ததனிக்கோர்ட்டு நீதிபதி ஓ.பி.சைனி, குற்றச்சாட்டுகளை நிருபிக்க அரசுத்தரப்புதவறிவிட்டதாக கூறி ஆ.ராசா, கனிமொழிஎம்.பி. உள்ளிட்ட அனைவரையும் விடுதலை செய்து கடந்த 2017-ம் ஆண்டு டிசம்பர் 21-ந் தேதி தீர்ப்பு கூறினார்.

இந்த தீர்ப்புக்கு எதிராக அமலாக்கத்துறை மற்றும் சி.பி.ஐ. டெல்லி ஐகோர்ட்டில் தனித்தனியாக கடந்த ஆண்டு மார்ச் மாதம் மேல்முறையீட்டு மனுக்கள் தாக்கல் செய்தன. இவற்றுக்கு பதில் மனு தாக்கல் செய்யுமாறு ஆ.ராசா, கனிமொழி உள்ளிட்ட அனைவருக்கும்நோட்டீஸ் அனுப்ப கடந்த ஆண்டு ஐகோர்ட்டு உத்தரவிட்டது.

அதன் பிறகு இந்த மேல்முறையீட்டு மனுக்கள் மீதான விசாரணை பல்வேறு காரணங்களால்ஒத்திவைக்கப்பட்டு வந்தது. இறுதியாக, அக்டோபர் 24-ந் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இந்நிலையில், இம்மனுக் களை அவசரமாக விசாரிக்க வேண்டும் என்று சி.பி.ஐ. தரப்பில் தனியாக மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனுவின் மீதான விசாரணை நேற்று டெல்லி ஐகோர்ட்டில் தனி நீதிபதி ஏ.கே.சாவ்லா முன்னிலையில் நடைபெற்றது. சி.பி.ஐ. தரப்பில் கூடுதல் சொலிசிட்டர்ஜெனரல்சஞ்சய்ஜெயின் ஆஜரானார்.

சி.பி.ஐ. தரப்பு கோரிக்கையை ஏற்க மறுத்த நீதிபதி ஏற்கனவே அறிவித்தபடி வருகிற அக்டோபர் 24-ந் தேதி, மேல்முறையீட்டுமனுக்களை விசாரணைக்கு எடுத்துக்கொள்வதாக தெரிவித்தார். அப்போது, அனைத்து தரப்பினரும்விசாரணையில்பங்கேற்பதைஎதிர்பார்ப்பதாகவும் அவர் கூறினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்திராயன் - 2 விண்கலம்



திட்டமிட்டபடி சந்திராயன் – 2 விண்கலத்தின் சுற்றுவட்டப்பாதை 4–வது முறையாக உயர்த்தபபட்டுள்ளது. இஸ்ரோ தகவல்

## ஜம்மு - காஷ்மீருக்கு அளிக்கப்பட்ட சிறப்பு அந்தஸ்து ரத்து: பாராளுமன்றத்தில் மசோதா தாக்கல்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# KULENDRAN

*Immigration*
*Law Chambers*



## UK'S PROMINENT IMMIGRATION EXPERTS

- இலங்கையிலிருந்து UK வருவதற்கான விசா தொடர்பாக தொடர்பு கொள்ளவும்
- பல்கலைக்கழக மாணவர் அனுமதி
- மாணவர் விசா
- சுற்றுலா விசா

Head Office:
90, High Street.
Colliers Wood,
London, Sw19 2BT
Cell: 07769 185 592
Tel: 020 8542 8222
Fax: 020 8542 8666
Email: kilc_work@yahoo.co.uk



தமிழினி தகவல் களஞ்சியம், ஜூன் இதழ் 12.6,2019ல் திருமதி சரோஜினிதேவி குலேந்திரன் அவர்களால் அச்சடிக்கப்பட்டு இலவசமாக லண்டனில் விநியோகிக்கப்படுகின்றது, ஆசிரியர் திரு வ.மா. குலேந்திரன், இணை ஆசிரியர் திரு பிரியராம் சிவம்.
மின்னஞ்சல்: vkevents2019@yahoo.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org